டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 9.06.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 291 - Madurai | Online Edition

## விசாகப்பட்டினத்தில்

# கடல் உணவு ஏற்றுமதி குறித்த தேசியப் பயிலரங்கம் நடைபெற்றது

புது தில்லி, ஜூன் 8

கடல் உணவு ஏற்றுமதி குறித்த தேசியப் பயிலரங்கை, ஆந்திரப் பிரதேச அரசு, மத்திய மீன்வளம் அமைச்சகம், மத்திய வர்த்தக அமைச்சகம் ஆகியவை இணைந்து, கடந்த 5, 6 ஆகிய தேதிகளில் ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் நடத்தின. பயிலரங்கின் முதல் நாள் நிகழ்வில், ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், மத்திய மீன்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங், மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கிஞ்சரபு ராம்மோகன் நாயுடு, மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறைத் துறை அமைச்சர் சிராக் பாஸ்வான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்தப் பயிலரங்கில் மத்திய அரசின் மூத்த அதிகாரிகளுடன், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், ஏற்றுமதி ஆய்வுக் குழு, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், நபார்டு உள்ளிட்ட முக்கிய தேசிய நிறுவனங்கள் பங்கேற்றன. மேலும், இந்தப் பயிலரங்கில் கடல் உணவு ஏற்றுமதியாளர்கள், தொழிற்சங்கங்கள், பதப்படுத்து பவர்கள், புத்தொழில் நிறுவனங்கள், பிற மதிப்புச் சங்கிலிப் தரப்பினரும் கலந்து கொண்டு, கடல் உணவு ஏற்றுமதிச் சூழலமைப்பு குறித்து ஆலோசனை நடத்தினர்.

இந்தியாவை உலக அளவில் போட்டித்தன்மை வாய்ந்த கடல் உணவு ஏற்றுமதி நாடாக நிலைநிறுத்துவதை இந்தக் கலந்தாய்வுகள் வலியுறுத்தின.

# சாமானியனின் கோரிக்கை! நிறைவேற்றுமா அரசு!!

தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர் மாவட்டம் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். கடந்த 2-6-2026 அன்று சன்னா நல்லூரில் இருந்து தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை பார்க்க உறவினர் காரில் அழைத்துச் சென்றார். அப்போது நெல் மூட்டைகள் குவியல்களை கண்டு வியந்து போனேன். அதனை அடுக்கி வைத்த நேர்த்தியும் மூட்டைகள் வைக்க செயல்பட்ட கைவண்ணம் சிறப்பு. சாலையில் செல்லும் போது ஒரு கிராமத்தில் இந்த நிகழ்வு கண்டு களித்தேன். ஆனால் மூட்டைகள் எண்ணிக்கை அதிகம். அநேகமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்று கருத முடியும்.

இருப்பினும் வெட்ட வெளியில் நீல வானத்தை மட்டுமே போர்வையாக கருதி எந்தவொரு தனிப்பட்ட சிறப்பாக கவனிப்பும் இன்றி இருந்தது மிகுந்த நெருடல். திடீர் மழை எனில் என்ன செய்வார்கள்?!

**பாதுகாப்பு என்பது என்ன?!**

உண்ணும் உணவுப் பொருள் எவ்வாறு சேமித்து வைக்க வேண்டும்?

குறைந்த பட்சம் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டாவது பாதுகாப்பு செய்ய வேண்டாமா?

விவசாயத்துறை மற்றும் நெல் கொள்முதல் கிடங்கு தொடர்புடைய அலுவலர்கள் இதனை கட்டாயக் கடமையாக எடுத்துச் செய்ய முன் வர வேண்டும்.

மழையில் நனைந்து அது முளைத்து சில பத்திரிகை செய்தி வெளியாகி பின் சட்டமன்றத்தில் விவாதம் தேவையா?!

Prevention is better than Cure.

NAGALAPURAM K.S.KODEESWARAN கோரிக்கை விடுத்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி




சேலம், ஜூன் 8

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் வேளாண்மை துறையில் அட்மா திட்டத்தின் கீழ் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளி வகுப்பு அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, முன்னிலையில் வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) நீலாம்பாள் தலைமையில் மேட்டுப்பட்டி தாதனூர் கிராமத்தில் நடைபெற்றது.

ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் சண்முகசுந்தரம், பயிற்சியாளராக கலந்து கொண்டு பண்ணைப் பள்ளி என்பது விதை முதல் விதை வரை என்ற தத்துவத்தின் அடிப்படையில் பருவம், ரகம், விதை அளவு, விதை நேர்த்தி செய்வதன் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்து மண் மாதிரி எடுத்தல் குறித்து செயல் விளக்கம் செய்து காட்டினார்.

அயோத்தியாபட்டிணம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் கோதைநாயகி, நீர் மாதிரி எடுத்தல் மற்றும் சொட்டு நீர் பாசனத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார். மேட்டுப்பட்டி தாதனூர் – வயக்காடு விவசாயிகள் பயனடைந்தனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் செல்வி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**உலர் பழ சாட்**

**தேவையான பொருட்கள்**

அவல், வேர்க்கடலை, பொட்டுக்கடலை கால் கப்,

பாதாம், முந்திரி, பிஸ்தா, தலா 10 எண்ணிக்கை

சாட் மசாலா பொடி ஒரு தேக்கரண்டி, பேரிச்சம்பழம், உலர் திராட்சை தலா 10 எண்ணிக்கை

உப்பு தேவையான அளவு

**செய்முறை**



ஒரு பாத்திரத்தில் அவல், பொட்டுக்கடலை வேர்க்கடலை, துருவிய பாதாம், முந்திரி, பிஸ்தா, சாட் மசாலா பொடி, கொட்டை நீக்கிய துண்டுகளாக நறுக்கிய பேரிச்சம்பழம்,உலர் திராட்சை, மற்றும் தேவையான அளவு உப்பு ஆகியவற்றை கலந்தால் உடனடி உலர் பழ சாட் தயார்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கொடுத்து அனுப்புவதற்கு ஏற்ற சுவையான ஸ்னாக்ஸ் அயிட்டம் தான் இது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# வேளாண் அறிவியல் நிலையத்தில் காளான் பயிற்சி




கடலூர், ஜூன் 8

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக ஒரு நாள் காளான் பயிற்சி 08.06.2026 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர், முனைவர் க.நடராஜன் துவக்கி வைத்து காளான் உற்பத்தி மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். இப்பயிற்சியை முனைவர் சு.சிவசங்கர், தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை துறை) நடத்தினார். இப்பயிற்சியில் காளான் வகைகள், காளான் வளர்க்கும் முறை, காளான் படுக்கை, காளானில் மதிப்பூட்டப் படும் பொருட்கள் பற்றி விவரமாக எடுத்துரைக்கப்பட்டது.

இல.விஜய், காளான் தொழில் முனைவோர், இப்பயிற்சியில் கலந்துக்கொண்டு தனது வெற்றி அனுபவங்களை எடுத்துரைத் தார். மேலும் முனைவர் சு.கண்ணன், மதிப்பூட்ட பொருட்களான பிஸ்கட், கட்லட், சூப் போன்ற பொருட்கள் தயாரிப்பு பற்றி விளக்கினார். செயல்விளக்கமாக காளான் வித்துக்கள் உற்பத்தி மற்றும் காளாண் படுக்கைகள் அமைக்கும் முறைகள் பற்றி முனைவர் சு.சிவசங்கர் செயல்விளக்கம் அளித்தார்.

இல.விஜய், குடில்களில் ஏற்படும் பூச்சி, நோய் மற்றும் எலி தாக்குதலுக்கு ஏற்ற தட்பவெப்பநிலை வளரும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி தெளிவாகவும், செயல்விளக்கமாகவும் எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கு கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர். விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டுதனது சந்தேகங்களை விஞ்ஞானிகளிடம் கேட்டு தெளிவு பெற்றனர்.

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு முகாம்




மதுரை, ஜூன் 8

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் இரும்பாடி கிராமத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள், விரிவாக்க பணியாளர்கள், விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி, வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பிரதம மந்திரி கௌரவ நிதி திட்ட அவசியம் பற்றியும் எடுத்து கூறி தகுதியுள்ள அனைத்து விவசாயிகளும் பதிவு செய்திட கேட்டுக்கொண்டார். மேலும் வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் ஆனந்த், நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து கூறும் போது, நெல்லில் புதிய இரகங்களை சாகுபடி செய்தல், நெற்பயிருக்கு தேவையான உரங்களை பயிர்களின் நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் முறைகளையும் நெற்பயிரில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி எடுத்து கூறினார். வேளாண்மை அலுவலர் தீபஞான சுந்திரி, வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படும் இடுபொருட்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். இம்முகாமில் விவசாய பெருமக்கள் கலந்து கொண்டார்கள். உதவி வேளாண்மை அலுவலர் விக்டோரியா செலஸ், விவசாயிகளின் தனித்துவ அடைய எண் பதிவின் முக்கியத்துவம் பற்றி எடுத்து விளக்கினார். முடிவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரியா நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர், சந்திரசேகரன், உதவி தொழில்நுட்ப மேலாளர் பூமிநாதன், அருணாதேவி ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# செய்தித்தாள்களில் பார்சல் தேவையா?




செய்தித்தாள்களில் உணவுப் பொருட்களை பார்சல் செய்வது ஏன் ஆபத்தானது? – ஒரு விரிவான விளக்கம்இந்தியாவில் தெரு வோரக் கடைகள் முதல் பெரிய உணவ கங்கள் வரை உணவுப் பொருட்களைச் செய்தித்தாள்களில் மடித்துக் கொடுப்பது ஒரு பொதுவான பழக்க மாக இருந்து வருகிறது. குறிப்பாக வடை, பஜ்ஜி, சமோசா போன்ற எண்ணெயில் பொரித்த உணவுகளையும், சூடான இட்லி, தோசை போன்றவையும் செய்தித்தாள்களில் வைத்துத் தருவதை நாம் தினமும் பார்க்கிறோம். ஆனால், இந்தப் பழக்கம் மெல்லக் கொல்லும் விசத்திற்கு ஒப்பானது என்று இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) எச்சரித்துள்ளது.

இதன் பின்னணியில் உள்ள அறிவியல் மற்றும் உடல்நல அபாயங்கள் குறித்து விரிவாகக் காண்போம். செய்தித்தாள் மையில் உள்ள நச்சுக்கள் செய்தித்தாள்களை அச்சிடப் பயன்படுத்தப்படும் மையில் ஏராளமான வேதிப்பொருட்கள் கலந்துள்ளன.

**இதில் முக்கியமாக :** கன உலோகங்கள் (Heavy Metals) : மையில் காரீயம் (Lead), காட்மியம் (Cadmium) போன்ற நச்சுத்தன்மை வாய்ந்த உலோகங்கள் உள்ளன.

**நிறமிகள் மற்றும் சாயங்கள் :** கவர்ச்சிகரமான நிறங்களைக் கொடுக்கப் பயன்படுத்தப்படும் வேதிப்பொருட்கள்.

**பிணைப்பான்கள் (Binders) மற்றும் கரைப்பான்கள் :** மை காகிதத்தில் ஒட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

**ரசாயனங்கள், மை எவ்வாறு உணவில் கலக்கிறது?**

மை எவ்வாறு உணவில் கலக்கிறது? செய்தித்தாள் காகிதம் மிகவும் மெல்லியது மற்றும் உறிஞ்சும் தன்மை கொண்டது. சூடான உணவுகளை அல்லது எண்ணெய் அதிகம் உள்ள பலகாரங்களை இதில் வைக்கும் போது, காகிதத்தில் உள்ள மை உருகத் தொடங்குகிறது.

**1. வெப்பம் (Heat) :** உணவின் வெப்பம் மையை இளக்கி, அது உணவோடு எளிதாகக் கலக்க வழிவகை செய்கிறது.

**2. எண்ணெய் (Oil) :** எண்ணெயில் பொரித்த உணவுகளில் உள்ள எண்ணெய், மையில் உள்ள ரசாயனங்களைக் கரைத்து உணவின் ஒரு பகுதியாக மாற்றி விடுகிறது.

**ஏற்படும் உடல்நல பாதிப்புகள் :** செய்தித்தாள் மையில் உள்ள ரசாயனங்கள் நம் உடலுக்குள் செல்லும்போது பின்வரும் தீவிர பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

**பாதிப்பு வகை விபரங்கள்**

**புற்று நோய் அபாயம் :** மையில் உள்ள சில வேதிப்பொருட்கள் 'கார்சினோஜென்கள்' (Carcinogens) என்று அழைக்கப்படுகின்றன, இவை புற்றுநோயை உண்டாக்கும் காரணியாகச் செயல்படு கின்றன. செரிமானப் பிரச்சனைகள் வயிற்றில் புண்கள், அஜீரணம் மற்றும் குடல் சார்ந்த கோளாறுகளை இவை ஏற்படுத்தும்.

**உறுப்பு பாதிப்பு :** காரீயம் போன்ற உலோகங்கள் ரத்தத்தில் கலந்து சிறுநீரகம், கல்லீரல், மூளை வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

**குழந்தைகளுக்குப் பாதிப்பு :** வளரும் குழந்தைகளுக்கு இது நரம்பு மண்டலப் பாதிப்புகளை ஏற்படுத்தி, அவர்களின் கற்கும் திறனைக் குறைக்கக்கூடும்.

**பாதுகாப்பான மாற்றுகள் :** உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய நாம் பின்வரும் முறைகளைப் பின்பற்றலாம்.



**வாழை இலைகள் :** இது மிகவும் பாதுகாப் பான மற்றும் பாரம்பரியமான முறையாகும்.

**உணவுத் தர காகிதங்கள் (Food Grade Paper) :** மைக்குப் பதிலாகப் பாதுகாப்பான பூச்சுகள் கொண்ட காகிதங்களைப் பயன்படுத்தலாம்.

**துருப்பிடிக்காத எஃகு (Stainless Steel) பாத்திரங்கள் :** உணவு களை வாங்கச் செல்லும் போது வீட்டிலிருந்தே பாத்திரங்களைக் கொண்டு செல்வது மிகச் சிறந்தது.

**கண்ணாடி அல்லது பீங்கான் பாத்திரங்கள் :** இவை உணவோடு வினைபுரியாது.

உணவே மருந்து' என்ற பழமொழிக்கு ஏற்ப நாம் உண்ணும் உணவு ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். லாப நோக்கத் திற்காகச் செய்தித்தாள்களைப் பயன்படுத்தும் வியாபாரிகளும், விழிப்புணர்வு இல்லாமல் அதை வாங்கும் நுகர்வோரும் மாற வேண்டியது காலத்தின் கட்டாயம். சிறிய கவனக்குறைவு பெரிய ஆரோக்கியச் சீரழிவிற்கு வழிவகுக்கும் என்பதால், செய்தித்தாள் பார்சல்களைத் தவிர்த்து ஆரோக்கியமான வாழ்வை உறுதி செய்வோம்.

**ஆதாரம் : இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) வழிகாட்டுதல்கள்.**

# விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை – பயறுவகை பயிற்சி




கிருஷ்ணகிரி, ஜுன் 8

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், பாலேப் பள்ளி கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயறு வகை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில்குமார் பயறுவகை சாகுபடியில் அதிக மகசூல் தரமான விளைச்சலும் பெற ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்கள் பின்பற்றுவது அவசியம் என வலியுறுத்தினார். விதை நேர்த்தி செய்வதின் மூலம் விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தி நல்ல முளைப்புதிறன் பெற முடியும். மண் பரிசோதனை அடிப்படையில் உரமிடுதல் மற்றும் நுண்ணுட்டச் சத்து கலவைகளை பயன்படுத்துவதன் மூலம் பயிரின் வளர்ச்சி மேம்பாட்டு விளைச்சல் அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

வேளாண்மை அலுவலர் பவித்ரா பேசுகையில் ரகத்தேர்வு மற்றும் விதை நேர்த்தி அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற சான்றளிக்கப்பட்ட ரகங்களைத் தேர்ந்தெடுத்து விதைப்பதற்கு முன் ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா கொண்டு விதை நேர்த்தி செய்வது அவசியம். இது மண்ணின் தழைச்சத்தை நிலைநிறுத்த உதவுகிறது. களை மேலாண்மை பயிரின் ஆரம்ப கட்டத்தில் முதல் 30 முதல் 40 நாட்கள் வயலை களையின்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை ரசாயன மருந்துகளைச் சார்ந்திருப்பதைத் குறைத்து இயற்கையான முறையில் வேப்பங்கொட்டைச் சாறு விளக்குப் பொறி மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று கூறினார். வேளாண்மை அறிவியல் நிலையம் ஆராய்ச்சி யாளர்கள் இஸ்மாயில் பேசுகையில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் இரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாட்டை குறைத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் மையை முன்னேற்ற முடியும் என்றார்.

ரமேஷ் பேசுகையில் உயிர் உரங்கள் இயற்கை இடு பொருள்கள் உயிரில் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை தொடர்பான தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களையும் இயற்கை வேளாண்மை முறைகளையும் ஒருங்கிணைந்து பின்பற்ற வேண்டும் என அலுவலர்கள் கேட்டுக் கொண்டனர். நிகழ்வில் உதவி வேளாண்மை அலுவலர் வனிதா வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பரசு உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம் கிரிஜா உள்ளிட்டோர் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.



# பூச்சிகளை கவரும் பொறி பயிர்கள் (TROP CROPS)



இன்றைய காலகட்டத்தில் பூச்சிகளின் பெருக்கம் அதிகரித்தவாறு உள்ளது. எனவே அவற்றை அழிப்பதை விட கட்டுப்படுத்திடவும், முக்கிய பயிரை (MAIN CROP) அதிகமாக தாக்காத வாறு அவற்றை குழப்பி அலைய விடுவதில் இந்த பொறி பயிர்கள் முக்கியமாக உள்ளது. (வீடுகளில் எலியை பிடிக்க கருவாட்டு பொறி வைப்பது போல) பூச்சிகளை கவர இந்த பொறி பயிர் அவசியமாகும்.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் வரப்பு பயிர், ஊடுபயிர் சால் பயிர் போன்ற பொறி பயிராகும். இதனால் பூச்சிகளின் நடமாட்டம் குறைவதுடன் இனப்பெருக்கமும் கணிசமாக குறையும். அது முட்டை இட ஏதுவாக இலை பகுதி இல்லாத காரணமாக இனப்பெருக்கம் குறையும்.

**பல பயிர் சாகுபடி (MUTIPLE CROPS)**

ஒரே பயிரை தொடர்ந்து வயலில் பயிரிட்டால் கடந்த பருவத்தில் உள்ள (புழு, பூச்சி, கூண்டு புழு) பருவ பூச்சிகள் எளிதாக தாக்கும். என்ன மருந்து தெளித்தாலும் கட்டுபடுத்த இயலாது. ஆனால் பல்வேறு பயிர்கள் பூக்கும் செடிகள், அழகான மலர்கள் ஆகியவற்றை சேர்த்து பயிரிட்டால், பூச்சிகள் தங்களுடைய தீனியை தேடி போவதில் ஒரு வித குழப்பம் (CONFUSION) ஏற்படுவதால் முக்கிய பயிர் தாக்குதல் குறையும்.

**என்னென்ன பயிர்கள் சேர்ந்த பயிரிடலாம்?**

1) பருத்தியில் – வெண்டை

2) தக்காளியில் – சாமந்தி, துளசி

3) மிளகாயில் – தட்டைபயறு, சோளம்

4) நெல்லில் – தட்டைபயறு.

**எடுத்துக்காட்டாக சில பொறி பயிர்கள்**

1) தக்காளியில் பழத்துளைப்பானை கட்டுப்படுத்த மேரி கோல்டு, வெள்ளரி சாகுபடி செய்யலாம்.

2) பருத்தியில் காய்புழுக்களை கட்டுப்படுத்த வெண்டை பயிரிடலாம்.

3) முட்டைகோஸ் காளிபிளவர் பயிரில் அந்துப்பூச்சிகளை கவர எள் பயிரிடலாம்.

4) நிலக்கடலையில் கம்பளிபூச்சிகளை கவர ஆமணக்கு சூரிய காந்தி பயிரிடலாம்.

**இந்த பொறி பயிரால் என்னென்ன நன்மைகள்?**

1) முக்கிய பயிரில் பூச்சி தாக்குதல் குறைவு.

2) மருந்தடிப்பு செலவும் குறைவு.

3) பொறிபயிர் பயிரிட வதால் அதனுடைய இலைதழைகள் நிலத்தில் வீழ்ந்து மக்கி உரமாகும்.

4) கூடுதலான வருமானம் கூட கிடைக்கும் (வெண்டை).

என்ன பயிரை காக்க ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கையாளுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# விவசாய விளை நிலம் காப்போம்!



இராணிப்பேட்டை, ஜூன் 8

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பாக விவசாய விளை நிலம் காக்கும் இயக்கத்தின் கீழ் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் இயற்கை விவசாயம் மற்றும் சமச்சீர் உரப்பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர், ஜி.திலகவதி, தலைமையேற்று, மண் வள மேலாண்மை, மண் பரிசோதனை, விவசாய நிலத்தின் மண் வகையை ஆய்வு செய்து, அதற்குத் தேவையான பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை பயிருக்கு இட வேண்டும் என்று தெரிவித்தார். இயற்கை உரங்களின் பயன்பாடு, மண்ணின் அங்கக கார்பன் அளவை உயர்த்திட பசுந்தாள் உரம், தொழு உரம், மண்புழு உரம் போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் என்றும் ஒரே பயிரை பயிரிடாமல், பருவகாலத்திற்கு ஏற்ப வெவ்வேறு பயிர்களை மாற்றி பயிரிடுவதால் நிலத்தின் வளம் குறையாமல் பாதுகாக்கப்படும் என்றும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

ஞானசௌந்தரி, உதவி வேளாண்மை அலுவலர், தமிழகத்தில், துல்லியமான பாசனத்திற்கு சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன முறைகளைப் பயன்படுத்தலாம். அதற்கான ஆவணங்கள் வேளாண்மை துறையிடம் கொடுத்து பயன் பெறுவது, துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் கிடங்கின் இருப்பு நிலை குறித்து எடுத்துரைத்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் மு.சசிகலா, மண் வளத்தை மீட்டெடுக்கும் எளிய முறைகள் மற்றும் நிலையான மேலாண்மை உத்திகள், மண்வள அட்டையின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட உரங்களின் பயன்பாடுகள், உழவன் செயலியின் மண் வளம் மூலம் நிலத்தின் உர அளவுகளை கண்டறிதல் குறித்து விளக்கி நிகழ்ச்சியை நிறைவு செய்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர்களான நர்மதா மற்றும் ஜெயப் பிரகாஷ் ஆகியோர் இப்பயிற்சியினை ஏற்பாடு செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வேளாண் விஞ்ஞானி வயல் ஆய்வு!




சேலம், ஜுன் 8

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம் நைநாம்பட்டி, முருங்கப்பட்டி மற்றும் எஸ்.பாப்பாரப்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈ, காண்டாமிருக வண்டு, சிவப்பு கூன் வண்டு தாக்குதல் அறிகுறிகள் மற்றும் கட்டுபாடுகள் பற்றியும், கரும்பில் பேருட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறைகள் மற்றும் நிவர்த்தி முறைகள் குறித்தும் பருத்தியில் சாறு ஊறிஞ்சும் அசுவினி, வெள்ளை ஈ, இலைப்பேன் தாக்குதல் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றியும் வேளாண் விஞ்ஞானி, விரிவாக்க அலுவலர் மற்றும் விவசாயிகள் கூட்டு வயல் ஆய்வு நடைபெற்றது.

ஏத்தாப்பூர், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஆர்.ஜெகதாம்பாள் கலந்து கொண்டு மேற்கண்ட பூச்சிகளை கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டுப்பொறி, இன கவர்ச்சிப் பொறி, முட்டை ஒட்டுண்ணி, என்.பி.வி வைரஸ், இரை விழுங்கிகள், ஊடுபயிர் சாகுபடி, வேப்பங்கொட்டைசாறு, வேப்பம் புண்ணாக்கு ஆகிய இயற்கை சார்ந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள கேட்டுக் கொண்டார். மேலும் பொருளாதார சேத நிலையை கடக்கும் போது குறைந்த அளவில் இரசாயன மருந்துகளை பயன்படுத்தலாம் என்று பரிந்துரை வழங்கப்பட்டது. இதை தொடர்ந்து மண் வளம் காப்போம், குறைந்த இராசாயன உரங்களை பயன்படுத்துதல், குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்து சாமி உடன் இருந்தனர்.

ஒவ்வொரும் ஆய்விலும் 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர் என்று வேளாண்மை உதவி இயக்குனர் பா.கார்த்திகாயினி ஒரு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# உலக சுற்றுச்சூழல் தின விழா!



மதுரை, ஜுன் 8

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உலக சுற்றுச் சூழல் தின விழா ஜுன் 5 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பெ.சந்திரமணி, சுற்றுச்சூழல் தினவிழாவின் முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் முறைகள் குறித்து பேசினார்.

மண் மற்றும் சுற்றுச்சூழல் துறைத்தலைவர் பேராசிரியர் பி.கிறிஸ்டி நிர்மலா மேரி அனைவரையும் வரவேற்று, சுற்றுச்சூழலை பாதுகாத்தல், பூமி வெப்பமடைதல், இயற்கை வானிலை ஏற்படும் சுற்றுச்சூழல் கேடுகளையும் பாதுகாப்பு உத்திகள் மற்றும் பல்லுயிர் பெருக்கம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் பேராசிரியர், முனைவர் பா.சரவண பாண்டியன், தற்போதுள்ள இயற்கை சூழலை பற்றியும் காற்றின் தன்மை, மண்வளம் இயற்கை நமக்கு கொடுக்கும் சுகாதாரம் அதை பேனிகாக்கும் முறைகளை கூறினார். பேராசிரியர் தீ.ஜெகதீஸ்வரி, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் முறைகளைக் கூறினார். மேலும் பேராசிரியர் இரா.ம.ஜெயபாலகிருஷ்ணன், இயற்கை வளங்கள் பாதுகாத்தல், வானிலை மாற்றங்களால் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்கள் அதை சரி செய்யும் முறைகளை மிக தெளிவாக மாணவர்களுக்கு உரையாற்றினர்.

மக்களின் விழிப்புணர்ச்சிக்காக, கல்லூரி வளாகத்தில் பல்வேறு போட்டிகளான கட்டுரைப் போட்டி, வினாடி வினா மற்றும் வண்ணக்கோல ஓவிய போட்டிகள் மிக சிறப்பாக நடத்தப் பட்டன. இவ்விழாவின் முடிவில் உதவி ஆசிரியர் இரா.முருக ராகவன், இயற்கை சுற்றுப்புறத்தை வானிலை சீர்கேட்டிலிருந்து பாதுகாக்கும் முறையுடன் நன்றியுரையாற்றினார்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை மண் மற்றும் சுற்றுச்சூழல் துறை ஊழியர்களின் மூலமாக ஏற்பாடு செய்து சிறப்பித்தனர்.

# வேளாண் துறையுடன் இணைந்து நானோ விழிப்புணர்வு முகாம்



நாமக்கல், ஜூன் 8

நாமக்கல் மாவட்டத்தில், வேளாண்மைத் துறையுடன் இணைந்து “KHET BACHAO ABHIYAN” விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை மற்றும் KVK அதிகாரிகள் பங்கேற்றனர்.

நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திலீப்.C.S. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நிகழ்ச்சியின் போது, இப்கோ நிறுவனத்தின் கள அதிகாரி அப்துல் ரகுமான் நானோ உரங்கள் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்து விவசாயி களுக்கு விரிவாக விளக்கினார். குறிப்பாக, மண்வளத்தை பாதுகாப்பது, உர பயன்பாட்டை திறம்பட நிர்வகிப்பது மற்றும் தற்போதைய உரத் தேவையை சமாளித்து விளைச்சலை அதிகரிப்பதில் அவற்றின் பங்கு குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், இப்கோ ட்ரோன் தொழில்நுட்பம் நேரடியாக செயல்முறை விளக்கத்துடன் காட்சிப்படுத்தப்பட்டது. இந்த ட்ரோன் தொழில்நுட்பத்தின் மூலம் வேளாண் உள்ளீடுகளை துல்லியமாகப் பயன்படுத்துதல், விவசாயிகளின் செலவைக் குறைத்தல், செயல்திறனை அதிகரித்தல் போன்ற பல நன்மைகள் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டன.


இந்நிகழ்ச்சி, நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்த்து, நிலையான மற்றும் முன்னேற்றமான விவசாயத்தை ஊக்குவிக்கும் முயற்சியாக அமைந்தது.




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# கழிவுகளின் கார்பன் சுவடுகள் - ஒரு பார்வை

**அறிமுகம்**




கழிவுகளின் கார்பன் சுழற்சி பூமியின் உயிர் வேதியியல் சமநிலையை பராமரிக்கும் முக்கிய செயல்முறையாகும்.

இது வளி மண்டலம், தாவரங்கள், விலங்குகள் மற்றும் மண் ஆகியவற்றுக்கு இடையே கார்பனின் இயக்கத்தை விவரிக்கிறது. உணவு கழிவுகள் நம் தினசரி வாழ்வின் ஒரு பெரிய சவாலாக உள்ளன.

உலகளவில் ஆண்டுதோறும் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களில் 30% வரை வீணாவதால் கார்பன் உமிழ்வு அதிகரித்து சுற்றுச்சூழல் பாதிக்கிறது. இந்தக் கட்டுரை தனிநபர் மட்டத்தில் எளிமையான, நடைமுறை வழிகளைப் பகிர்ந்து, நீங்கள் எவ்வாறு உங்கள் கார்பன் சுவடுகளைக் குறைத்து பசுமை வாழ்க்கையைத் தொடங்கலாம் என்பதை விளக்குகிறது.

**கார்பன் சுழற்சியின் அடிப்படை**

கார்பன் சுழற்சி என்பது பூமியின் உயிர்க்கோளம், புவிக் கோளம், நீர்க்கோளம் மற்றும் வளிமண்டலத்தில் கார்பன் பரிமாற்ற உயிர்ப்பு வேதியியல் சுழற்சியாகும். வளிமண்டலத்தில் கார்பன்டை ஆக்சைடு ($CO_2$) வடிவில் உள்ள கார்பன், தாவரங்களால் ஒளிச்சேர்க்கையில் உறிஞ்சப்படுகிறது : $CO_2$ + $H_2O$ + ஆற்றல் - ($CH_2O$) - + $O_2$. இது தாவரங்களின் உடலில் சேமிக்கப்பட்டு, உணவுச்சங்கிலி மூலம் விலங்குகளுக்குப் பரவுகிறது. விலங்குகள் சுவாசிக்கும் போது அல்லது இறந்து சிதைந்த போது $CO_2$ ஆக மீண்டும் வளிமண்டலத்திற்கு வெளியிடப்படுகிறது.

### கழிவுகளின் பங்கு

கழிவுகள் (மண்) கார்பன் சுழற்சியில் முக்கியமான மூழ்கியாக செயல்படுகின்றன. மண்ணில் சேமிக்கப்பட்ட கார்பன் (சுமார் 1,500 கிகாடன்கள்) தாவர கழிவுகள், வேர்கள் மற்றும் சிதைந்த பொருட்களால் உருவாகிறது. நுண்ணுயிரிகள் மற்றும் பூஞ்சைகள் இவற்றை சிதைத்து $CO_2$ ஐ வெளியிடுகின்றன அல்லது நீண்ட காலம் சேமித்து வைக்கின்றன. மண் சுவாசம் ஆண்டுக்கு 98 பில்லியன் டன் $CO_2$ வெளியிடுகிறது, இது மனித உமிழ்வுகளை விட 3 மடங்கு அதிகம்.

### மனித தலையீடு மற்றும் சீர் குலைவு

புதைபடிவ எரி பொருள்களை எரிப்பது, வன அழிப்பு மற்றும் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் கார்பன் சுழற்சியை சீர் குலைக்கின்றன. 2020ல் வளி மண்டல $CO_2$ 52% அதிகரித்து உள்ளது. இது புவி வெப்பமயமாதலுக்கு காரணமாகிறது. கடல் அமிலத்தன்மை 30% அதிகரித்து, கார்பன் உறிஞ்சுதலை குறைக்கிறது.

### சமீபத்திய மாற்றங்கள்

2026ல் உலக வெப்பநிலை 1.2-1.9°C உயரும் என நினிநு எச்சரிக்கிறது, இது கார்பன் சுழற்சியை மேலும் பாதிக்கும். இந்தியாவில் 2025 டிசம்பரில் CCUS roadmap வெளியிடப்பட்டு, 20,000 கோடி ஒதுக்கப்பட்டது. 2050க்குள் 750 மில்லியன்டன் $CO_2$ பிடிக்க இலக்கு. தமிழ்நாட்டில் 220 MW காற்றாலைக்கு 2025ல் 1.6 மில்லியன் கார்பன் கிரெடிட்கள் வழங்கப்பட்டது. 2025ல் இந்தியா பசுமை இல்ல வாயு உமிழ்வில் முதலிடம் பிடித்தது.

### தீர்வுகள் மற்றும் எதிர்காலம்

மரம் நடுதல், CCUS தொழில்நுட்பம் மற்றும் நிலையான விவசாயம் சுழற்சியை சமநிலைப்படுத்தும். தமிழ்நாட்டில் பசுமைக்கரங்கள் திட்டம் போன்றவை மரக்கன்றுகளை ஊக்கு விக்கின்றன. பாரிஸ் ஒப்பந்தம் மற்றும் SDG 13 இலக்குகள் இதை ஆதரிக்கின்றன. கார்பன் சுவடுகளைக் (carbon footprint) குறைப்பது தனிப்பட்ட மட்டத்தில் எளிதான மாற்றங்களால் சாத்தியமாகும். இவை ஆற்றல் சேமிப்பு, போக்குவரத்து மற்றும் உணவுப் பழக்கங்களை மையமாகக் கொண்டவை.

**ஆற்றல் சேமிப்பு**

வீட்டில் ஸிசிம் பல்புகள், ஸ்டார் மதிப்பு சாதனங்கள் பயன் படுத்தி ஆற்றலை 20-30% குறைக்கலாம். பயன்படுத்தாத நேரங்களில் விளக்குகள், சாதனங்களை அணைக்கவும்; சோலார் பேனல்கள் நிறுவி புதுப்பிக்கப்படும் ஆற்றலை ஊக்குவிக்கவும்.

**போக்குவரத்து மாற்றங்கள்**

தனியார் வாகனங்களுக்கு பதிலாக பொதுப்போக்குவரத்து, சைக்கிள் அல்லது நடைபயிற்சி பயன்படுத்துங்கள். மின்சார வாகனங்கள் தேர்ந்தெடுத்தால் $CO_2$ உமிழ்வு 50% வரை குறையும். உணவு மற்றும் கழிவு மேலாண்மை தாவர அடிப் படையிலான உணவுகளை அதிகர்த்து மாமிச உட்கொள்ளலை குறைக்கவும்; இது மீத்தேன் உமிழ்வை குறைக்கும். Reduce, Reuse, Recycle கொள்கையை பின்பற்றி பிளாஸ்டிக்கை தவிர்த்து, உணவு கழிவுகளை குறைக்கவும்.

**தண்ணீர் மற்றும் வனப்பாதுகாப்பு**

கசிவுகளை சரி செய்து தண்ணீரை சேமிக்கவும். வீட்டில் மரம் நடுதல் அல்லது வனப்பாதுகாப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும்; மரங்கள் $CO_2$ஐ உறிஞ்சி சுவடுகளைக் குறைக்கும்.

**விழிப்புணர்வு பரப்பல்**

குடும்பம், நண்பர்களுக்கு இந்த வழிகளைப் பகிர்ந்து செயல்படுத்தவும். இந்தியாவில் CCUS திட்டங்கள் போன்ற தேசிய முயற்சிகளை ஆதரிக்கவும்.

**முடிவுரை**

உணவு கழிவுகளைக் குறைப்பது கார்பன் சுவடுகளைக் குறைத்து, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பேணுவதன் எளிய, நேரடி வழியாகும். தினசரி திட்டமிடல், சமர்த்தியமான சேமிப்பு மற்றும் மறு பயன்பாட்டால் நாம் மட்டுமல்லாமல், எதிர்கால சந்ததிகளுக்கும் பசுமை உலகத்தை வழங்கலாம்.

கட்டுரையாளர்கள் : ***அபிநய ஸ்ரீ.ச, பிரியதர்ஷினி.செ, புஷ்பலதா.அ, வித்ரா.ச, காவியா.ச (சுற்றுச்சூழல் அறிவியல் உதவி பேராசிரியர், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, துறையூர்.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# ரோவர் வேளாண்மை கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்!

பெரம்பலூர், ஜூன் 8

பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண்மை கல்லூரியில் 08.06.26 திங்கள் கிழமை அன்று இறுதியாண்டு மாணவர் களுக்கான வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது.




திருச்சியை தலைமை இடமாகக் கொண்ட பசுமை பாரதம் அக்ரிகல்ச்சர் சொல்யூன் என்ற விவசாய ஆலோசனை மற்றும் சேவை நிறுவனத்தின் மூலமாக இந்த வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமில் 35 மாணவர்கள் கலந்து கொண்டு நேர்முகத் தேர்வில் பங்கேற்றனர். அதில் 14 மாணவர் களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

ரோவர் கல்விக் குழும மேலாண் தலைவர் முனைவர் வரதராஜன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கி அறிவுரை கூறினார். துணைத் தலைவர் ஜான் அசோக் வரதராஜன் முன்னிலை வகித்தார்.

கல்லூரி முதல்வர் முனைவர் அய்யநாதன் மற்றும் இயக்குனர் முனைவர் வஹாப் ஆகியோர் வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்கப்படுத்தியதோடு தேர்ந் தெடுக்கப்பட்ட மாணவர்களை பாராட்டினார்கள்.

கல்லூரியின் வேலைவாய்ப்பு ஆலோசகர் பரமேஸ்வரி வேலை வாய்ப்பு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் முகாம் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

# குறுவை நெல் சாகுபடி வயல்களில் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஆய்வு

அரியலூர், ஜுன் 8

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் குறுவை நெல் சாகுபடி மேற்கொண்டுள்ள விவசாயிகளின் நெல் சாகுபடி வயல்களில் அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி ஆய்வு மேற்கொண்டார். காட்டகரம் கிராமத்தில் விவசாயிகள் நடராஜன், கோவிந்த சாமி, சரவணன் மற்றும் ரமேஷ் ஆகியோர் சாகுபடி செய்துள்ள டிபிஎஸ்–5 இரக குறுவை சாகுபடி வயல்களைப் பார்வையிட்டு நுண்சத்து இடுதல், நீர் மேலாண்மை, களை நிர்வாகம், பூச்சி நோய் நிர்வாக முறைகள், பொருளாதார சேதநிலை அறிந்து பயிர் பாதுகாப்பு மேற்கொள்வது போன்ற தொழில்நுட்பங்களை விளக்கினார்.



பின் தண்டலை கிராமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளைநிலம் பாதுகாப்போம் இயக்க விழிப்புணர்வு முகாமில் பங்கேற்று விவசாயிகளுக்கு மண் ஆய்வு செய்து தேவையான உரங்களை மட்டும் இட்டு மண் வளத்தைப் பாதுகாத்து குறைந்த இடுபொருட்கள் செலவில் அதிக மகசூல் பெறலாம் எனவும் விவசாயிகள் அனைவரும் வேளாண் மற்றும் சகோதரத் துறைகளின் திட்ட பயன்கள் பெற விவசாயி தனித்துவ அடையாள எண் பெறுவது அவசியம் எனவும் உழவன் செயலியில் பதிவு செய்யும் முறை குறித்தும் விளக்கினார்.

வேளாண் உதவி இயக்குநர் (பொ) மகேந்திர வர்மன், நெல், நிலக்கடலை மற்றும் பயறு வகைப் பயிர்களில் உயிர் உரங்கள், நுண்சத்து பயன்பாடு, டிரைக்கோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்தல் வேரழுகல் நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

மண் ஆய்வு நிலைய வேளாண் உதவி அலுவலர் பிரசாந்த், மண் ஆய்வுக்கு மண் மாதிரி எடுக்கும் முறையை செயல் விளக்கம் செய்து காட்டினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, பாரம்பரிய நெல் சாகுபடி முறைகள் மற்றும் மண் ஆய்வு செய்து உரமிடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கினார்.

முகாமில் உதவி வேளாண் அலுவலர் ராம்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஷ் குமார் கலந்து கொண்டனர்.



# உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்பாடு பயிற்சி



விருதுநகர், ஜூன் 8

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டாரத்தில் உள்ள சின்னகொல்லப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை மூலம் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்பாடு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் முத்தையா, தலைமை தாங்கி பயிற்சி துவக்கி வைத்தார். இதில் வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை, உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகள் சந்தித்து, புதிய தொழில் நுட்பங்கள், சிறந்த விவசாய முறைகள், பயிர் மேலாண்மை, பற்றி கலந்துரையாடினர்.

ரசாயன பூச்சிக்கொல்லிகள் மனித உடலில் சேரும் போது, அவை மரணத்தை ஏற்படுத்தாவிட்டாலும் புற்றுநோய், நரம்பியல் கோளாறுகள், மற்றும் ஹார்மோன் சமநிலை யின்மை போன்ற பல கொடிய நீண்ட கால நோய்களை ஏற்படுத்துகின்றன. இவற்றின் தாக்கத்தில் இருந்து உடலைப் பாதுகாக்க, காய்கறி மற்றும் பழங்களைச் சமைக்கும் முன் உப்பு மற்றும் மஞ்சள் கலந்த வெதுவெதுப்பான நீரில் நன்கு கழுவுவது அவசியம்.

ரசாயனப் பயன்பாட்டைக் குறைக்கும் மாற்று வழிகளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கை உரங்கள்மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை பயன்படுத்த வேண்டும். இந்த தொழில்நுட்பங்கள் விவசாய வளர்ச்சியையும், விவசாயி களின் வாழ்வாதாரத்திணையும் உயர்த்தும். உற்பத்தித்திறன் அதிகரித்து விவசாயிகளுக்கு நிலையான வருமானம் கிடைப்பதில் உறுதுணையாக அமையும் என தெரிவித்தனர்.

உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் கா.அரிபுத்திரன் தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் செய்து காண்பித்தார். விவசாயிகள் பார்வைக்கு பல்வேறு வகையான பூச்சிகள், நன்மை செய்யும் நுண்ணுயிர்கள், பூஞ்சாணங்கள், பாக்டீரியாக்கள், வைரஸ்மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டச் சத்துக்கள், கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. விவசாயிகள் நேரடியாக கண்டு தெரிந்து கொண்டனர்.

விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து தொழில்நுட்பங்களும் செயல்விளக்கம் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது. பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, விவசாயிகள் சந்திக்கும் வயல்வெளி பிரச்சனைகள் குறித்து வேளாண் துறை அலுவலர் இந்து கலந்துரையாடினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா, உதவி மேலாளர் முனீஸ்வரி, உதவி வேளாண் அலுவலர் கிருஷ்ணவேணி, இயற்கை விவசாயி தங்க முனியசாமி ஆகியோர் இயற்கை விவசாயம் ஆர்கானிக் விவசாயம் செயல்முறைகள் பற்றி எடுத்துரைத்தனர். பஞ்சகாவ்யா, 3 ஜி கரைசல், வேப்பம் கொட்டை சாறு தயாரித்து பயன்படுத்துதல் பயிற்சியும் வழங்கப்பட்டது.

இயற்கை சூழ்நிலையோடு சார்ந்த விவசாய முறைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் ரசாயன நஞ்சு எச்சம் இல்லாத தரமான உணவு தானியங்களை உற்பத்தி செய்திடலாம். உயிர் உரங்களும் உயிரில் கட்டுப்பாட்டு காரணங்களும் பயன்படுத்தினால் அதிக அளவிலான ரசாயன பயன்பாட்டினை குறித்து குறைத்து மண்ணை வளமுடன் உயிருடனும் உயிருடனும் பேணிப் பாதுகாக்கலாம் என வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர். இந்த பயிற்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா, உதவி மேலாளர் முனீஸ்வரி ஆகியோர் இந்த பயிற்சி விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இந்த பயிற்சி விவசாயிகளின் உயிரியல் பயன்பாடு அறிவு மற்றும் அவற்றை செயல்முறை படுத்தும் ஒரு நிகழ்வாக அமைந்தது.